ISSN:2582-9599



# இடம்பெயர்வு நோக்கில் எட்டுத்தொகை நூல்கள்

46

**முனைவர் மு.ஹேமலதா**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு - 638 012**

**மின்னஞ்சல் – hemapreethi1974@gmail.com**

**ஆய்வு நோக்கம்** மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள ஒரு காரணியான இடம்பெயர்வு பற்றி அறிதல்.

**ஆய்வுச்சுருக்கம்** செம்மொழி இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களில் இடம்பெயர்தல் என்னும் தலைப்பு அமிழ்தினுமினிய நம் தாய் மொழியின் சிறப்பையும், அதன் மூலம் அறியப் பெறும் வரலாற்று உண்மைகளையும், ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும். பண்டைய காலத்தில் இடம் பெயர்வுக்கான நோக்களையும் அதில் கையாண்ட பண்பாட்டு நேர்மையையும் ஆராய்ந்து இன்றைய தலைமுறையினர் அறிந்து தங்களைப் பண்படுத்திக் கொள்ளலாம்.

**திறவுச் சொற்கள் -** இடம் பெயர்தல் – நாவலந்தண்பொழில்- பட்டினப்பாலை- மண் கவர்தல் –ஆநிரை கவர்தல் – பகைத்தணிவு - பாணர்

‘திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்’

என்பார் பாரதிதாசன். தொன்மை, இயன்மை, தூய்மை, தாய்மை, முன்மை, வியன்மை, வளமை, மறைமை, எண்மை, இளமை, இனிமை, தனிமை, ஒண்மை, இறைமை, அம்மை, செம்மை என்று பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது தமிழ். தமிழன் என்றோர் இனம் உண்டு தனியே அதற்கோர் திறம் உண்டு. அத்திறம் பன்னாளில் சிறந்து விளங்கியது. மண்ணும் இமயமலை எங்கள் மலையே என்று மார்தட்டிக் கூறியவன் தமிழன். கங்கையும் காவிரியும் எங்கள் நதியே என்று இறுமாந்து பாடியவன் தமிழன். பஞ்சநதி பாயும் பழனத் திருநாடு எங்கள் நாடே என்று நெஞ்சினை நிமிர்த்தி பேசியவன் தமிழன்.

‘நாவலந்தண்பொழில்’ என்று அறியப்பட்ட தமிழ்க்கூறு நல்லுலகம் உலக நாகரிகங்களுக்கெல்லாம் முந்தைய நாகரிகத்தைத் தன்னகத்தே கொண்டதும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழைப் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இலக்கண வரம்போடு இலக்கியம் யாத்து தமிழினைத் தலை நிமிரச் செய்ததும் உலகியலார் அறிந்த உண்மை. தமிழ் இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் அனைத்தும் பழந்தமிழரின் பண்பாட்டினை அறிந்து

கொள்ளும் கருவூலமாக விளங்குகிறது.

செம்மொழி இலக்கியங்களில் இடம்பெயர்தல் என்னும் தலைப்பு அமிழ்தினுமினிய நம் தாய் மொழியின் சிறப்பையும், அதன் மூலம் அறியப் பெறும் வரலாற்று உண்மைகளையும், ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும்.

**இடம் பெயர்தல்**

இடம் பெயர்தல் என்பது ஓரிடத்திலிருந்து நிலைத்திருந்த வாழ்க்கையைப் பிறிதொரு பகுதிக்கு இடம் பெயர்தல் ஆகும். இடம் பெயர்தல் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ள ஒரு காரணி ஆகும். இச்செயல்பாடு பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் பொருந்தும்.

இடம்பெயர்தல் மனிதன் என்று தோன்றினானோ அன்றே அவனோடு தோன்றிவிட்டது. ஆதி மனிதன் உணவு உற்பத்தியின் பொருட்டு இடம் பெயர்வை அல்லது நகர்வை மேற்கொண்டான்.

பதியெழு வறியா பழங்குடியாக வாழ்ந்த மக்கள், நம் மண்ணின் மைந்தர்களோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதை,

சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழிபல பெருக்கிய பழிதீர் தேயத்தும்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் (பட்டினப்பாலை- வரிகள் 214-218)

என்று பட்டினப்பாலை சுட்டுகிறது. இயக்கம் என்பது மானிடத் தத்துவம். பூமி சுற்றுவதால் உலகம் நிலைத்திருக்கிறது. மனிதன் இயங்கினால் தான் வாழ்க்கை. இயக்கம் நிற்கும் பொழுது மரணம். எனவே இடம் பெயர்தல் என்பது வாழ்க்கைச் சக்கரம் போல் சுழன்று கொண்டே இருக்கும். விருப்பு வெறுப்புக்கு அங்கே இடமில்லை.

தனி மனிதனோ, சிறுகூட்டம் ஒன்றோ தம் இருப்பிடத்தை நிலையான ஒரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றிச் செல்வதை இடப்பெயர்வு (Migration) என்று வாழ்வியற்களஞ்சியம் குறிப்பிடுகிறது. சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்வியலை அகம், புறம் என்று பாகுபடுத்தினார்கள். அகப்புற வாழ்க்கைகள் தேரின் இரு சக்கரம் போல் இணையாகப் போற்றப்பட்டது. இடம் பெயர்வு இரு வாழ்க்கையிலும் இருந்தது. இரு நிலைகளிலும் தற்காலிகமான இடம் பெயர்வு அதிகம் காணப்பட்டது.

இடம் பெயர்தலைத் தூண்டும் அல்லது நிகழ்த்தும் காரணிகள் எண்ணற்றவை. அரசியல், சமூகம், பொருளாதாரம், இயற்கை போன்றவை இடம்பெயர்வுக்கு முக்கிய காரணிகளாக அமையும்.

சங்க காலத்தில் அரசர்கள் தாங்கள் வகுத்துக் கொண்ட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அரசாட்சி நடத்தினார்கள். மக்களை ஒரு நெறிப்படுத்தி வாழ வழி வகுக்கும் ஆட்சித் திறனுடைய மன்னனே இவ்வுலகத்திற்கு உயிர் போன்றவன். இதனைத் தான் மோசிகீரனார் நெல்லும் உயிரன்றே, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறநானூறு – பாடல்186) என்று பாடி அரசனின் கடமையைச் சுட்டுகிறார்.தமிழக அரசியல் வரலாற்றில் அடிக்கடி அரசர்களுக்குள் போர்கள் நடைபெற்றன. போரிலும் ஒரு மனுநீதியினைக் கடைபிடித்தார்கள். அதனால் வேந்தர்களும் படைவீரர்களும், மக்களும் இடம்பெயர்ந்து செல்லும் அவசியம் ஏற்பட்டது. அவ்வாறு போர்கள் நடத்த பொழுது பெண்கள், குழந்தைகள். முதியவர்கள், உடல் ஊனமுற்றோர், நோய்வாய்ப்பட்டவர், வேதியர், பசுக்கள் போன்றவற்றைப் பத்திரமான இடத்திற்கு அழைத்துச் சென்று பாதுகாத்தனர்.

‘ஆவும் ஆனின பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாதீரும்
அறத்து ஆறுநுவலும் பூட்கை மறத்தின் (புறநானூறு –பாடல் எண் 9)

**மண் கவர்தல்:**

தொல்காப்பியர் காலத்திலேயே மண் கவர்தல் நிலை பழக்கத்தில் இருந்தது. வேந்தன் தானே படையெடுத்துப் போகுதலும், அவனோடு பொருந்திய தளபதி போன்றோரும் பெயர்தல் உண்டு. ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும், புதுவதன்று இவ்வுலகத்து இயற்கை. தான் ஆளும் நிலப்பகுதி சிறியது என்று விரிவுப்படுத்தி எண்ணுதல், பிறர்நிலப் பகுதிகளைக் கவர்தல் என நிலத்தினைக் கைப்பற்ற பல படையெடுப்புகள் நடத்தப்பெற்றன.

தானே சேறலும் தன்னோடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே (தொல்காப்பியம் – பொருள் –நூற்பா29)

என்று வஞ்சித்திணை நூற்பா கூறுகிறது. கைப்பற்றுதல், கிடைக்காத போது நிலத்தினை அழித்தொழித்தல், ஆகிய இரண்டும் வேந்தர்களின் செயல்களாய் இருந்தன. கிள்ளிவளவனுக்கும், குட்டுவனுக்கும் நடத்த போரில் கழுமலம் என்னும் ஊர் அழிக்கப்பட்டதும் அதனால் அவ்வூரில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து வெளியேறிச் சென்ற செய்தியை நற்றிணைப் பாடல் காட்டுகிறது.

‘ ………………………… குட்டுவன்
அகப்பா அழிய நூறி, செம்பியன்
பகல் தீ வேட்ட ஞாட்பினும் மிகப் பெரிது’ (நற்றிணை பா 14,3-5)

கோசர்கள் சூழ்ச்சி செய்து நன்னன் எனும் அரசனின் காவல் மரத்தினை வெட்டி வெற்றிமாலை சூடியதால் அங்கு வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்து சென்றதைக் குறுந்தொகையும், பாசறையின்கண் தங்கி தான் மேற்கொண்டு வந்த போர்த்தொழில் முடிவடைந்தவுடன் தன் நாடு சென்று தலைவியிடம் இன்பங்களை நுகர்வோம் என்று விரைந்து செல்லும் காட்சியினை ஐங்குறுநூற்றிலும், பகைவர் நிலம் என்ற அவப்பெயரினை நீக்கி தன்நிலம் என்ற சுதந்திர உணர்வினைப் பெற, அவரை வென்று திறை கொண்டு வெல்வேன் என்பதனை

‘ஏற்றவர் புலம் கெடத் திறை கொண்டு
மாற்றாரைக் கடக்க, எம்மறம் கெழு கோவே’ (கலித்தொகை106)

கலித்தொகையிலும் காணலாம். ஆரியப்படை இடம் பெயர்ந்து சோழ நாட்டிற்கு வந்தமையும், வேற்று மொழி பேசிய வடுகரும், மோரியாரும் போர் சூழலால் தென்னாடு வந்தமையும் அகநானூறு சுட்டுகிறது.

முரண்மிகு வடுகர் முன்னுற, மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு’(அகநானூறு. பா67)

பதிற்றுப்பத்து முழுவதும் போர்களக் காட்சிகளே மிகுந்துள்ளது. குட்டுவனின் போர் திறமையும் போர் காரணமாக படைகள் இடம் பெயர்ந்து சென்றமையும், அவனால் அழிக்கப்பட்ட நாடுகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து சென்றமையைக் குமட்டூர் கண்ணனார் பாடியுள்ளார்.

‘கடவுள் நிலைஇய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆக
தென்அம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ் சமம் ததைய, ஆர்ப்பஎழ,
சொல் பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போர் அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ!(பாடல் 43)

தன்னால் அழிக்கப்பட்ட குடும்பத்தினை மீண்டும் அவர்கள் நாட்டிலேயே மகிழ்ச்சியோடு வாழ வழி செய்தான் குட்டுவன் என்பதைக் ‘கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே’ என்ற வரி புலப்படுத்துகிறது.

அரசர்களின் வீரத்தினையும், கொடையையும் எடுத்துக் கூறும் வரலாற்றுக் கருவூலமாக விளங்கும் நூல்

புறநானூறு. போர் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வுகளையும் அழிவுகளையும் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகிறது. கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி வடபுலத்து மன்னர்கள் படையெடுத்துச் சென்றான் என்பதை,

வடபுல மன்னர்வாட, அடல் குறித்த
இன்னாவெம் போர் இயல்தேர் வழுதி ( புறநானூறு 52)

எடுத்துக் கூறுகிறது. அதாவது பாண்டியன் வடநாட்டு படையெடுப்பு காரணமாக இடம்பெயர்ந்ததை அறியமுடிகிறது.

**பகை தணிப்பிரிவு:**

ஒரு நாட்டுடன் எளிதில் சமாதானம் செய்து கொள்ள முடியாதபோது போரிட்டே அவர்களை நல்வழிப்படுத்தும் அவசியம் ஏற்படலாம். அத்துடன் நாட்டின் பெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், சமுதாயத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கும் தம் நாட்டைவிட்டு வேறு நாட்டுக்குச் செல்லும் கட்டாயம் ஏற்படலாம். இதுவே பகை தணிப்பிரிவு.

ஓதல் பிரிவுக்கும், தூதுப் பிரிவுக்கும் உரியவர்கள் உயர்ந்த ஒழுக்கமும், மகத்தான திறமையும், செயல் ஆற்றலும் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

முல்லைப்பாட்டில் யவனர்கள் தமிழ்நாட்டில் பாண்டிய மன்னனுக்குக் காவலர்களாக இருந்தமை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சங்க காலப் பாண்டியர்களின் ஆட்சிக் காலத்தில் இரண்டு கடற்கோள் நிகழ்ந்தது. முதல் கடற்கோளில் குமரிக்கண்டம் கடலுள் மூழ்கியது.

“மலிதிரை யூர்ந்து தன் மண் கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று, மேவார் நாடிடம் படப்
புலியொரு வில்நீக்கிப் புகழ் பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணங்கிய வாடாச்சீர் தென்னவன்” ( மு. கலி 104:1-4)

இடம் பெயர்ந்து செல்வதற்குக் குதிரையும் தேரும் பயன்படுத்தப்பட்டது. நிமிர் பரிய மா தாங்கவும் என்று கபிலர் பாடியுள்ளார். அகழியைக் கடக்கப் பாய்தற்குக் குதிரைக் கசையைத் தாங்கி வேண்டுமளவிலே பிடிக்கவும் அம்பாறாத் தூணி பொருந்திய முதுகை உடையவனாய் தேர்மிசை நின்று பரிசில் வழங்கியவன் செல்வகடுங்கோ வாழியாதன் என்று புகழ்கிறார். தலையாட்டமணிந்த மனஞ்செருக்கிய குதிரையினுடைய கவிந்த குளம்புகள் தாவ என்று கூறுவது குதிரையின் பாதங்களுக்கு இலாடம் பொருத்தியதை அறிய முடிகிறது பகைவரின் தேஎத்துக்கண் தேரினைச் செலுத்தினான் பாண்டியன் என்று பாடுவது அக்காலத்தில் குதிரையையும் தேரினையும்

இடம்பெயர்ந்து செல்ல பயன்பட்டமையை அறியமுடிகிறது.

கடுமான் றேன்றாய் செல்வன் யானே!
வெல்லும் போரினைச் செய்யும் வரக்
கழலணிந்த திருந்திய அடியினையையும் கடிய
செலவினையும் குதிரையையுடைய கிள்ளிவளவன்! என்றும்
வளி கடந்தன்ன வாச் செலல் இவுளியோடு(புறநானூறு -54)

என்ற வரி காற்று இயங்கினாற்போலும் தாவுதலுடைத்தாகிய குதிரையோடு தேரையும் உடையவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்று குமரனார் பாடுகிறார்.

**கொடை**

சங்க காலத்தில் தன்னை நாடி வரும் புலவர்களுக்குப் பரிசில் நல்கி பாராட்டுவதைப் பெரும் சிறப்பாகக் கருதினார்கள். ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப் பலரும் வருவர் பரிசின் மாக்கள். களாப்பழம் போலும் கரிய கோட்டை உடைத்தாகிய சிறிய யாழைக் கொண்டு பாடும் இனிய பாட்டை வல்ல பாணர் பரிசில் பெற்றுக் கொண்டு போனார்கள் என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாணர்களின் பெயர்வினைப் பாடுகிறார்.

கொங்கு நாட்டை ஆட்சி செய்த கொண்கானங் கிழான் பெருங்செல்வத் தொன்றல் இல்வனாயினும் தன்பால் நாடிவரும் பரிசிலர்க்கு இயன்றன நல்கி இன்புறுத்தும் ஈகையியல்பினன் என்பதை தகடூர் எறிந்த பெருங்சேரல் இரும்பொறையால் கவரி வீசப்பட்ட பெரும் மதிப்பிற்குரிய மோசிகீரனார், ‘பரந்த கடலருகே செல்லினும் நீர்வேட்கை கொண்ட மக்கள் சிற்றூறலை நாடிச் செல்வர். அது போல புலவர் வேந்தராற் பெரிதும் பேணப்படுவாராயினும் வள்ளியோரை நாடிச் செல்வது அவர்க்கியல்பு. அவ்வியல்பே நான் உள்ளி வந்தேன் ஈயென இரத்தலி அரிதே தவிர, நின் ஆண்மையினையும் கொண்கானத்தையும் பாடுவது எளிது. பெற்றது சிறிதாயினும் அதுவே ஊதியமாகக் கருதுபவன் யான்’ என்று உயர்த்தி பாடுகிறார். அத்தகைய வள்ளல்களை நாடி சென்று பொருள் பெற்று வாழ்ந்தார்கள் புலவர்கள். பரிசில் பெற்றவர்கள் பரிசில் பெறச் செல்பவர்களுக்கு வழி தடத்தைக் கூறுவார்கள். மோசிகீரனார் பாணர்களுக்கு

வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யாரென் னிடும்பை தீர்க்கெனக்
கிளக்கும் பாண கேளினி” (புறநானூறு - 155)

கொண்கானகிழாரின் கொடை வன்மையினை எடுத்துக் கூறுகிறார். காடு பற்றியிருக்கும் குமணன் தன்பால் வந்த தம் வறுமைத் துன்பத்தை எடுத்தோதிப் பாடிய பெருந்தலைச் சாத்தனாரிடம் தன்பாற்

பொருளில்லையாயினும், தன்னுடல் சிறந்த பொருளாதலையும், அதன்கண் தலை சிறந்த உறுப்பாதலால், அதனைக் கொண்டு காட்டினால் தன் தம்பியாகிய இளங்குமணன், மிக்க பொருள் தருவதாய் நாட்டு மக்கட்குத் தெரிவித்திருத்தலையும் நினைத்து தன் தலையைக் கொய்து கொண்டு சென்று வேண்டும் பொருள் பெற்று வறுமைத் துயரைப் போக்கிக் கொள்க வென்று தன் வாளை எடுத்துக்; கொடுத்தான்.

'நாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறித்தொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே' (புறநானூறு)

பரிசில் பெற்று தங்கள் வறுமையைப் போக்கி கொள்ள காடு, மலைகளைக் கடந்து பல இன்னல்களுக்கு ஆளான போதும் பரிசில் கிடைக்கவில்லையென்றால் புறப்பட்டுச் செல்லப்பட்ட வழியிடத்து இப்பொழுது செய்யும் புள் நிமித்தத்தையும் புறப்பட்ட மூகூர்த்தத்தையும் பழிப்பார்களே தவிர ஈத்திலராயினும் பரிசிலரைப் பழியார் என்று கழைதின் யானையார் பாடுகிறார்.

அதியமான், தான் நெடிது உயிர் வாழ்தலினும் ஔவையார் வாழ்தலால் உலகுயிர்கட்கு ஆக்கமாகும் என்ற பேரருளால் தன்னை நாடி வந்த ஔவையாருக்கு நெல்லிக்கனியை ஈந்து வான் புகழும் பெருமையை அடைந்தார். ஒரு நாள் இரு நாள் அல்ல. பன்னெடு நாள்கள் தனித்துச் செல்வதின்றிப் பலரோடு கூடிப் பன்முறையும் சென்ற போதும் தலைநாளில் வரவேற்று வேண்டுவன அளித்தது போலவே நல்குவன் என்று ஔவையார் பாடுகிறார்.

அரசியல் காரணமாக பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் வராமல் ஒழிந்தால் அதனைப் பொறுக்க மாட்டாத தலைவி, தனது வருத்தத்தினை நாரையின் வாயிலாக விடுகின்றாள்.

"காம்புதவை மணத்த கல்லதர்ச் சிறுநெறி
உறுபகை பேணாது இரவின் வந்திவள்"

என்ற நற்றிணைப் பாடலின் வரிகள் சிறுநெறி வழிபாதையினை எடுத்துக்கூறுகிறது. வினை முற்றிய தலைவன் தேர்பாகனுக்குரைத்தது என்ற துறையில் அமைந்த பாடல்கள் சென்று வினை முடித்த தலைவன் தேர்ப்பாகனை நோக்கி நம் அரசன் பகையைத் தணித்துவிட்டனன் ஆதலால், நீ தேரைப் பூட்டிச் செலுத்துவாயாக

'இருநிலம் குறையக் கொட்டிப் பரிந்தின்று

ஆகி போகிய அசைவில் நோன்தாள்
மன்னர் மதிக்கும் மணிவினைப் புரவி
கொய்ம்மயிர் எருத்தின் பெய்ம்மணி ஆர்ப்பப்' ( நற்றிணை-81)

என்றும் குறித்த பருவத்தில் மீண்டு வர மனம் மகிழ்ந்து அறவர் வாழி! என வாழ்த்துகிறாள் தோழி. இதனையே அகநானூறு,

"வந்து வினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தம்திறை கொடுத்துத் தமர்ஆ யினரே
முரண் செறிந் திருந்த தானை இரண்டும்
ஒன்றுஎன அறைந்தன பணையே நின்தேர்
முன்இயங்கு ஊர்தி பின்னிலை ஈயாது
ஊர்க பாக!" (அகநானூறு 44)

என்று போர் முடித்து திரும்பும் போது தோப்;பாகனிடம் கூறுவதாக அமைந்துள்ளது. பல்வாறு காரணங்களாக இடம் பெயர்ந்த தன்மையை அறியலாம்.

அன்றிலிருந்து இன்று வரை இடம்பெயர்வு என்பது எல்லா காலத்திலும் நடைபெற்று வருகிறது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியாரின் பல்வேறு இடங்களுக்குச் சென்று நம்முடைய பண்பாட்டையும்; கலாசாரத்தையும் கடைபிடித்து தாய் நாட்டு அன்போடும் மொழிப்பற்றோடும் நல்வாழ்வு வாழ்கின்றார்கள்

**துணைநூற் பட்டியல்**

தொல்காப்பியம் – பொருளதிகாரம் – கழக வெளியீடு -1995
நற்றிணை கழக வெளியீடு -1998
ஐங்குறுநூறு – கழக வெளியீடு-1995
கலித்தொகை -கழக வெளியீடு-1994
அகநானூறு - கழக வெளியீடு-1995
புறநானூறு - கழக வெளியீடு-1995
பதிற்றுப்பத்து - கழக வெளியீடு-1995